# தமிழ்த்துறையின் நிகழ்வுகள் (2024) முதல் பருவம்

தமிழ்த்துறையின் சார்பில் முதுகலை மாணவர்களுக்கான கருத்தரங்கம், 1-10- 2024 அன்று  கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை –623407**

**தமிழ்த்துறை நடத்தும் முதுகலை மாணவர்களுக்கானஆய்வரங்கம்**

நாள்; 01-10-2024, நேரம்; பிற்பகல் 1.30 மணி முதல் 3.00 மணிவரை

இடம்; தமிழ்த்துறை கருத்தரங்க அறை

**அரங்கம் –1**

வரவேற்புரை : திருமிகு **ந. மணிமேகலை**

தலைமையுரை : முனைவர் **மு.பழனியப்பன்**, தமிழ்த்துறைத் தலைவர்

அரங்கத் தலைமை : முனைவர் **சு. தொண்டியம்மாள்**

கட்டுரையாளர்கள் : செல்வன் ச. முனீஸ்வரன் – சிற்றிலக்கியங்கள் –அறிமுகம்

செல்வி செ. கார்த்திகா– தமிழ்விடு தூதில் தமிழின் சிறப்பு

கருத்துரை : திருமிகு **கா.அமுதா**

---

**அரங்கம் –2**

அரங்கத் தலைமை : முனைவர் **க. சத்யா**

கட்டுரையாளர்கள் : செல்வி ச. பிரியங்கா – முக்கூடற் பள்ளு தரும்செய்திகள்

செல்வி மு. கார்த்திகா – இராச பாரம்பரியம்

கருத்துரை : திருமிகு **எம். சங்கீதா**

---

**அரங்கம் –3**

அரங்கத்தலைமை : முனைவர் க. அழகுராஜா

கட்டுரையாளர்கள் : செல்வி தொ. வனிதா – காவடிச் சிந்தின் இனிமை

செல்வி போ. சுபஸ்ரீ – மதுரைக் கலம்பகம் – ஒரு பார்வை

கருத்துரை : திரு **பெ. அசோக் குமார்**

---

**அரங்கம் –4**

அரங்கத் தலைமை : முனைவர் பி. ராஜபாண்டி

கட்டுரையாளர்கள் : செல்வி ம. கொங்கேஸ்வரி – குறவஞ்சி கூறும் கருத்துகள்

செல்வி. க. தாரணி – செந்தூர் பிள்ளைத்தமிழின் இனிமை

கருத்துரை : திருமிகு ஆ.சாந்தி

அனைவரும் வருக. ஆய்வுக் கருத்துகளைப் பெறுக.

அன்புடன்

தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை


தமிழ்த்துறை
OSA-21-22-198
OSA-21-22-187


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை
தமிழ்த்துறை


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை
தமிழ்த்துறை


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை
தமிழ்த்துறை




தொல்லியல் பயிலரங்கம்.





**மாலை தந்தி** MALAI THANTHI
9585 32 31 32
தமிழால் வெல்வோம்
DAILY EVENING · மாலை நாளிதழ்

## 03/10/24 திருவாடானை



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் தொல்லியல் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது கல்லூரி முதல்வர் முனைவர் பழனியப்பன் தலைமை வகித்தார் பேராசிரியர் அழகுராஜா முன்னிலையில் இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு பாரம்பரியத்தை அறிய தரும் தொல்லியல் என்ற தலைப்பில் மாணவ மாணவிகள் முன் சிறப்புரை ஆற்றினார்.தமிழ்த்துறை மாணவ மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தாலுகா செய்தியாளர் நிதிஸ்குமார்






**தினமலர்**

மதுரை பதிப்பு 02.10.2024



திருவாடானை அரசு கலைக்கல்லூரியில் தொல்லியல் பயிற்சிப் பட்டறை முகாம் நடந்தது.

## சங்க காலம் முதல் வரலாற்று சிறப்புடன் திருவாடானை

**திருவாடானை, அக்.2–**
சங்க காலம் முதல் திருவாடானைப் பகுதி வரலாற்றுச் சிறப்புடன் இருந்ததாக தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு தெரிவித்தார்.

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் தொல்லியல் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. முதல்வர் பழனியப்பன் தலைமை வகித்தார்.

பேராசிரியர் அழகுராஜா முன்னிலை வகித்தார். ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு 'பாரம்பரியத்தை அறியத் தரும் தொல்லியல்,' என்ற தலைப்பில் பேசியதாவது:

அதிகளவு நெல் விளைச்சல், விவசாயத்திற்காக பாண்டியர், சேதுபதிகள் உருவாக்கிய கண்மாய்கள், பெரிய ஆறுகள் குறுக்கிடாமை, இயற்கைத் தடைகள் இல்லாமை, இயற்கைத் துறைமுகங்கள், அதிகளவிலான வணிகப் பாதைகள், பாதுகாப்பு ஆகிய பல காரணங்களால் மாவட்டத்தின் நெற்களஞ்சியமான திருவாடானைப் பகுதியில் வணிகர், வணிகக்குழு, அறுநூற்றுவர் என்ற வணிகக்குழு, பாதுகாவல் வீரர்கள் இருந்ததை பல்வேறு கல்வெட்டுகளில் சுட்டி காட்டப்பட்டுள்ளன.

இயற்கை சார்ந்த ஊர் பெயர்கள், துறைமுகப் பட்டினங்கள் என சங்க காலம் முதல் இப்பகுதி வரலாற்றுச் சிறப்புடன் இருந்துள்ளது.

உலக மொழிகளில் உள்ள தமிழின் தாக்கத்தை அறிந்து கொள்ள தமிழ்த்துறை மாணவர்கள் கல்வெட்டுகளில் உள்ள தமிழ் சொற்களை ஆங்கில சொற்களுடன் இணைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

அதனை தொடர்ந்து நடந்த தொல்பொருட்கள் கண்காட்சியில் ராமநாதபுரத்தில் கிடைத்த பழைய, புதிய, நுண் கற்காலக் கருவிகள், கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள், ரோமானிய, சீன நாட்டுப் பானை ஓடுகள், இரும்புத் தாதுக்கள், இரும்புக் கழிவுகள், வட்டச் சில்லுகள், பானைக் குறியீடுகள், கல்வெட்டுகளின் மைப்படிகள் காட்சிக்கு வைக்கப்பட்டன.





மாணவர்கள் சுற்றுலா இரண்டாம் ஆண்டு மாணவர்கள்.



## விளையாட்டில் சாதனை

## தமிழ்த்துறை சார்ந்த மாணவர் செல்வன் முனீஸ்வரன் சதுரங்கப்போட்டியில் இராமநாதபுர மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்றார்




**திருவாடானை அரசு கல்லூரி மாணவர் அசத்தல்**

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கான கேரம் போர்டு பிரிவில், திருவாடானை அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி மாணவர் அசத்தியுள்ளார். முதுகலை 2ஆம் ஆண்டு தமிழ் பிரிவு மாணவர் முனீஸ்வரர் ராமநாதபுரம் மாவட்ட அளவில் நடந்த கேரம் போர்டு விளையாட்டில் 2ஆம் பரிசு பெற்றுள்ளார். இதை தொடர்ந்து திருவாடானை அரசு கல்லூரி & மாணவருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

03:35 pm,22nd Sep 2024

.

முதலமைச்சர் கோப்பைக்கான கபாடிப் போட்டியில் இராமநாதபுர மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற தமிழ்த்துறை சார்ந்த மாணவர்கள்.



மாலை MALAI தந்தி THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

20/09/24 ராமநாதபுரம்

இராமநாதபுரம் மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கபடி போட்டியில் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர்.

மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த மாணவர்களை கல்லூரி பேராசிரியர்கள் ,சமூக ஆர்வலர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் பாராட்டி வாழ்த்து கூறி வருகின்றனர்.

தாலுகா செய்தியாளர் நிதிஸ்குமார்

பிஎ தமிழ் முதலாம் ஆண்டு மாணவர்கள்



பிஎ தமிழ்  மூன்றாம் ஆண்டு மாணவர்கள்



மூன்றாம் ஆண்டு பி.ஏ தமிழ் பயிலும் மாணவிகள் சருகணி இதயா கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டுச் சிறப்பித்த நிகழ்வு

